# திராவிட முன்னேற்றக் கழகத்தை தனிமைப்படுத்தும் அரசியல் சக்தி தமிழ் மண்ணில் என்றும் உருவாகப்போவதில்லை!

தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் ஆளுங்கட்சியாவதற்கான எண்ணிக்கை பலத்தை தி.மு.க. எட்டவில்லை என்பதனாலும், தி.மு.க.வுடன் மதச்சார்பற்ற கூட்டணியில் இடம்பெற்ற சில அரசியல் கட்சிகள் விலகிச் சென்றமையாலும், தி.மு.க தனிமைப்படுத்தப்பட்டுவிட்டது என்ற விமர்சனம், சில அரசியல் கட்சிகளால் முன்வைக்கப்படுகிறது.

இத்தகைய விமர்சனத்தை முன்வைப்பவர்கள் தேர்தல் கூட்டணி பற்றியோ அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கட்டமைப்பு பற்றியோ, அரிச்சுவடி கூட அறியாதவர்களாகத்தான் இருக்க முடியும். தேர்தல் காலக்கூட்டணி என்பது சில பொதுவான திட்டங்களின் அடிப்படையில், குறிப்பாக மதவாத சக்திகளுக்கு எதிராக அமைக்கப்பட்ட கூட்டணிதான், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் உருவாக்கப்பட்ட மதச்சார்பற்ற கூட்டணியாகும்.

**இந்தத் தேர்தல் கூட்டணிக்கு ஆட்சியமைக்கும் வாய்ப்பினை மக்கள் இம்முறை வழங்கவில்லையெனில், அடுத்த சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான முயற்சியினையும், ஆக்கப்பூர்வமான திட்டங்களையும் திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொள்ளும் செயல்படுத்தும். தேர்தல் முடிந்த பின்னர், மதச்சார்பற்ற கூட்டணியிலிருந்து பிரிந்து சென்ற அரசியல் கட்சிகளைப் பற்றி கவலைப்பட வேண்டிய கட்டாயமோ, அவசியமோ திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உறுதியாக இல்லை.**

ஆனால் பிரிந்து சென்ற சில அரசியல் கட்சிகள் தங்களின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்காகவும், கொள்கை வேறுபாடுகளை சுட்டிக்காட்ட இயலாமையாலும், திராவிட முன்னேற்றக் கழகம் தனிமைப்படுத்தப்பட்டுவிட்டது என்ற விமர்சனத்தை மட்டும் முன்வைக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் தனிமைப்படுத்தப்படவில்லை மாறாக, திராவிட முன்னேற்றக் கழகம் தலைமை வகித்த மதச்சார்பற்ற கூட்டணியிலிருந்து பிரிந்து சென்றமைக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல்வீரர்கள் பெரிதும் மகிழ்ச்சியடைந்துள்ளார்கள். கழகச் செயல்வீரர்கள் வேகத்தடையில்லாத பந்தயத் திடலில் எதிரணியை எதிர்கொள்ள தயாராகி விட்டார்கள்.

**இனி திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொள்ளவிருக்கும் மின்னல்வேக அரசியல் செயல்பாடுகளை எதிர்கொள்ளவிருக்கும், எட்டாக்கனியை எட்டிப்பிடிக்க முடியாமல், ஏமாந்துபோய், இந்தப் பழம் புளிக்கும், எனப் பொய்யுரைத்துவிட்டு அடுத்த தோட்டத்து பழமரம் நோக்கிப் பயணம் மேற்கொண்டுள்ள வேடந்தாங்கல் விநோதப் பறவைகளும் அரசியல் நடைபாதைச் சிறுவியாபாரிகளும் வெகுவிரைவில் நிச்சயம் உணர்வார்கள்!!**

திராவிட முன்னேற்றக் கழகத்தை எந்த சக்தியாலும் தமிழ்நாட்டு அரசியல் களத்தில் தனிமைப்படுத்திவிட இயலாது என்பது வரலாறு. கடந்தகாலத்தில் அப்படிப்பட்ட விபரீத முயற்சியில் ஈடுபட்டவர்கள் எந்த நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் என்பதை வரலாறு தெளிவாக பதிவுசெய்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தை "தரைமட்டமாக்குவோம்", "மூட்டை பூச்சியைப் போல நசுக்கிவிடுவோம்" என்ற அரசியல் தலைவர்கள் எல்லாம் தடயம் தெரியாமலே போய்விட்டார்கள் என்பது கடந்தகால வரலாறு.



**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்

**திராவிட முன்னேற்றக் கழகம் என்பது ஒரு அரசியல்கட்சி என்பதைவிட, தமிழ் இனத்தையும், தமிழ் பண்பாட்டையும் மீட்டெடுத்து போற்றிக் காப்பாற்றுவதற்காக பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்ட உயிரோட்டமுள்ள இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்! இந்த இயக்கம் அண்ணன் தம்பி என்ற குடும்பபாச உணர்வோடு உருவாக்கப்பட்டு, பல தலைமுறைகளையும் கடந்து ஆலமரம்போல் படர்ந்து விரிந்து வேர்களாலும், விழுதுகளாலும் காலத்தை வென்று இன்றும் இன்னும் பலநூறு ஆண்டுகள் தமிழினம் உள்ளமட்டும் இயங்கிக் கொண்டிருக்கும் இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். எனவே, இந்த இயக்கம் தமிழினம் உள்ளமட்டும் காலமாற்றங்களை உள்வாங்கிக்கொண்டும் தொடர்ந்து இயங்கிக் கொண்டும் தான் இருக்கும்!**

ஜனநாயக ஆட்சிமுறையை ஏற்றுக்கொண்ட இந்திய ஒன்றியத்தில் மாநிலங்களிலும், ஒன்றியத்திலும் ஒவ்வொரு நாடாளுமன்ற சட்டமன்றங்களுக்கான தேர்தல்களில் ஆட்சிமாற்றங்கள் மக்களால் உருவாக்கப்படுவது இயல்பான நடவடிக்கைதான்.

ஜனநாயக ஆட்சிமுறையை முழுமையாக ஏற்றுக்கொண்ட இயக்கம் மட்டுமல்ல, ஜனநாயகத்திற்கு பேராபத்து வந்த காலகட்டத்தில், ஆட்சியையே விலையாகக் கொடுத்து ஜனநாயகத்தை மீட்டியது திராவிட முன்னேற்றக் கழகமாகும்! இந்தத் தேர்தல் பின்னடைவை இயல்பாக எடுத்துக் கொள்வதோடு, அதற்கான காரணங்களையும், மாற்றங்களையும் ஆய்வுசெய்து உரிய தீர்வுகாணும் என்பது மட்டும் உறுதி!

இன்றைய விரைவான அறிவியல் வளர்ச்சியின் காரணமாக "உலகம்" என்ற நீண்ட நிலப்பரப்பை, ஓர் கிராமம் (Global Village) என்று சொல்லத்தக்க அளவிற்கு செய்திகள் தகவல்கள் (Information) உடனடியாக உலகின் ஒரு முனையிலிருந்து அனைத்துப் பகுதிகளுக்கும் மின்னல் வேகத்தில் பரவிவிடுகிறது. வாழ்வியல் மாற்றங்களும் விரைவாக நடைபெறுகின்றன. உணவில் உண்ணும் முறையில்கூட "விரைவுஉணவு" (Fast Food) முறை பிரபலமடைந்துள்ளது.

எனவே, **காலமாற்றங்களுக்கேற்ப எதிர் கால சமுதாயத்தின் வார்ப்படங்களாம் இளை ஞர்களின் எதிர்பார்ப்புகளை ஆய்வுசெய்து, அதற்கான சட்டங்களையும், திட்டங்களையும் உருவாக்கக்கூடிய வழிமுறைகளைக் கண்டறிந்து இளைஞர்களையும் இணைத்துக்கொண்டு எதிர்கால சமூக பொருளாதார அரசியல் கட்டமைப்புகளை திராவிட முன்னேற் றக் கழகம் நிச்சயம் உருவாக்கும். திசைமாறிய இளைஞர்களை விழிப்புணர்வு பெறச்செய்து, திராவிட முன்னேற்றக் கழகத்தை கால மாற்றங்களைச் எதிர்கொள்ளும் வல்லமைபெற்ற இயக்கமாக மாற்றுவோம் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.**

திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை மீண்டும் மக்களிடம் எடுத்துச் செல்வோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், இளைஞர் அணியின் தலைவர், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகிய கழகக் காப்பாளர்களின் புதிய சிந்தனையால் உருவாகும் செயல் திட்டங்களை தமிழ்நாட்டு மக்களிடமும் குறிப்பாக, இருபால் இளைஞர்களிடம் எடுத்துரைத்து அவர்கள் விழிப்புணர்ச்சி பெற்றிடச் செய்வோம், தமிழ்மக்களின் உள்ளங்களை வெல்வோம், நாளைய நமது தமிழ்நாட்டை நவீனப்படுத்திட, இன்றைய இளைஞர்கள் மூலம் வழித்தடம் அமைப்போம் வாரீர்! நாம் மேற்கொண்டுள்ள பயணத்தின் வெற்றி வெகுதொலைவில் இல்லை.

---

### குடிநீர் பிரச்சினையை தீர்க்கக்கோரி
## அரசு பஸ்சை சிறைபிடித்து பொதுமக்கள் சாலை மறியல்!
### அரக்கோணம் அருகே பரபரப்பு!

அரக்கோணம் , ஜூன் 25 -

அரக்கோணம் அருகே குடிநீர் பிரச்சினையை தீர்க்கக்கோரி பொதுமக்கள் நேற்று முன்தினம் அரசு பஸ்சை சிறைபிடித்து சாலைமறியலில் ஈடுபட்டனர். ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் அடுத்த கீழ்பாக்கத்தில் 100க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு ஊராட்சி சார்பில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் அப்பகுதியில் உள்ள குளத்து நீரையும் பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

கோடை வெயிலின் காரணமாக குளம் வறண்டு விட்டது. இதனால் அப்பகுதியில் குடிநீர் பிரச்சினையும் நிலவு வருகிறது. பருவமழை தொடங்குவதற்கு முன்பு இந்த குளத்தை தூர்வாரி சீரமைக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதுகுறித்து பலமுறை புகார் தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையாம். இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் நேற்று முன்தினம் காலை காலி குடங்களுடன் அரக்கோணம்கீழ்பாக்கம் சாலையில் மறியலில் ஈடுபட்டனர். அப்போது அவ்வழியாக வந்த அரசு பஸ்சையும் சிறை பிடித்தனர்.

இதுகுறித்து தகவலறிந்த ஊராட்சி மன்ற தலைவர் ஆதியம்மாள், ஒன்றிய கவுன்சிலர் சுமதி, ஊரக வளர்ச்சி துறையினர், வருவாய் துறையினர் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று சாலை மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது குளத்தை தூர்வாரி சீரமைக்கவும், குடிநீர் பிரச்னையை தீர்க்கவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் உறுதியளித்தனர். இதையேற்று சாலை மறியலை கைவிட்டனர். மேலும் அரசு பஸ்சையும் விடுவித்தனர். இதனால் அப்பகுதியில் சுமார் 1 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

---

### பழனி தண்டாயுதபாணி திருக்கோவிலில்
## விஜய் படத்துடன் தங்கத்தேர் இழுத்து த.வெ.க.வினர் அத்துமீறல்!
### த.வெ.க.-வினரின் அத்துமீறலுக்கு பக்தர்கள் கண்டனம்!

பழனி, ஜூன் 25 -

பழனி முருகன் கோயில் மலை மீது விஜய் படத்துடன் த.வெ.க.வினர் அத்துமீறி தங்கத்தேர் இழுத்ததால் பக்தர்கள் அதிருப்தி அடைந்தனர்.

பழனி முருகன் கோயில் மலை மீது தினமும் மாலை நேரத்தில் தங்கத்தேரில் முருகன் வலம் வரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

பக்தர்கள் பலரும் தங்கத்தேர் இழுத்து முருகனை வழிபட்டுச் செல்கின்றனர். இந்நிலையில் விஜயின் பிறந்த நாளையொட்டி நேற்று தவெக நிர்வாகிகள் தங்க தேர் இழுத்து வழிபட்டனர்.

அப்போது தங்கத்தேர் முன்பாக விஜய் படத்தை வைத்துக்கொண்டு தேரை இழுத்துச் சென்றனர்.

பழனி மலை மீது எந்த அரசியல் கட்சித் தலைவர்களின் படத்தையும் கோயில் நிர்வாகம் அனுமதிப்பதில்லை.

ஆனால், த.வெ.க. நிர்வாகிகளின் இந்த செயலை கோவில் நிர்வாகம் கண்டு கொள்ளவில்லை.

மேலும், இந்த அத்துமீறலை தவெக நிர்வாகிகள் புகைப்படமாக எடுத்து சமூக வலைதளத்திலும் பரவ விட்டுள்ளனர். தவெகவினரின் இந்த செயலுக்கு இந்து அமைப்புகள் மற்றும் பக்தர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

---

### தி.மு.க, விவசாய அணி மாநில துணைச் செயலாளர் அரியப்பன் புதல்வர் –
## தி.மு.க. ஜென்சி நிர்வாகி அன்பானந்தம் வீட்டை முற்றுகையிட்ட போலீசார்!
### முதலமைச்சர் ஜோசப் விஜய்யை விமர்சித்ததாகக் கூறி விசாரணை!

கிருஷ்ணகிரி, ஜூன் 25 -

தமிழக முதல்வர் விஜய் மற்றும் நடிகை த்ரிஷா ஆகியோரின் பிறந்தநாள் கொண்டாட்டம் குறித்து சமூக வலைதளத்தில் விமர்சித்து வீடியோ வெளியிட்ட தி.மு.க. ஜென்சி நிர்வாகியின் வீட்டிற்குள் நள்ளிரவில் காவல்துறை புகுந்து தேடலில் ஈடுபட்ட சம்பவம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பொய் வழக்குப்பதிவு செய்தால் ராயக்கோட்டையில் பிரம்மாண்ட ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என திமுக சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



**நள்ளிரவில் போலீஸ் முற்றுகை - நடந்தது என்ன?**

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ராயக்கோட்டை அருகே உள்ள போடம்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் தி.மு.க. விவசாய அணியின் மாநில துணைச் செயலாளர் அரியப்பன். இவரது இளைய மகன் அன்பானந்தம், திமுகவின் 'GEN Z' ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினராக உள்ளார். சமூக வலைதளங்களில் எப்போதும் சுறு சுறுப்பாக இயங்கி வரும் இவர், நேற்று தமிழக முதல்வர் விஜய், நடிகை த்ரிஷாவுடன் பிறந்தநாள் கொண்டாடியது குறித்து விமர்சித்து சமூக வலைதள பக்கத்தில் வீடியோ ஒன்றை பதிவிட்டிருந்தார்.

இந்த நிலையில், நேற்று நள்ளிரவு சுமார் 12:30 மணியளவில் தேன்கனிக்கோட்டை டிஎஸ்பி ஆனந்தராஜ் தலைமையில், காவல் ஆய்வாளர் சசிகலா உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட போலீசார் திடீரென அரியப்பனின் வீட்டிற்கு வந்தனர். அவர்கள் அன்பானந்தத்தை விசாரணைக்காக அழைத்துச் செல்ல வேண்டும் என்று கூறியுள்ளனர்.

**எம்.எல்.ஏ மற்றும் குடும்பத்தினர் வாக்குவாதம்!**

இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அன்பானந்தத்தின் தந்தை அரியப்பன், தாய் மற்றும் சகோதரர்கள், "எந்தவித வாரண்ட்டும் இல்லாமல் நள்ளிரவில் வந்து கைது செய்ய வேண்டிய அவசியம் என்ன?" என்று போலீசாரிடம் காரசாரமாகக் கேள்வி எழுப்பினர். அதற்கு போலீசார், "விசாரணைக்காகத்தான் அழைக்கிறோம், அவரை வெளியே அனுப்புங்கள்" எனக் கேட்டுள்ளனர். ஆனால், அன்பானந்தம் பெங்களூருவில் பணிபுரிந்து வருவதால் அவர் வீட்டில் இல்லை என்று குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் வீட்டை சோதனை செய்ய வேண்டும் என போலீசார் பிடிவாதம் பிடித்தனர். தகவலறிந்து வேப்பனஹள்ளி சட்டமன்ற உறுப்பினரும், தி.மு.க. மாநில இளைஞரணி துணைச் செயலாளருமான பி. சீனிவாசன் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தார். போலீசாரிடம், "அன்பானந்தம் மீது என்ன வழக்குப் போடப்பட்டுள்ளது? யார் புகார் கொடுத்தது?" என்று அவர் கேள்வி எழுப்பினார். ஆனால், அதற்கு உரிய விளக்கமளிக்காத போலீசார், வீட்டின் உள்ளே புகுந்து சோதனையிட்டனர். அங்கு அன்பானந்தம் இல்லாததை உறுதி செய்துகொண்ட பின்னர் போலீசார் அங்கிருந்து கிளம்பிச் சென்றனர்.

"முதல்வரை விமர்சனம் செய்து வீடியோ வெளியிட்ட ஒரே காரணத்திற்காக, நள்ளிரவில் அடியாட்களைப் போல வந்து போலீசார் என் மகனை கைது செய்ய முயற்சி செய்துள்ளனர்" என அன்பானந்தத்தின் குடும்பத்தினர் கண்ணீருடன் குற்றம் சாட்டியுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து தகவலறிந்த கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரான பிரகாஷ், மாநில இளைஞரணி துணை செயலாளர் வேப்பன ஹள்ளி சட்டமன்ற உறுப்பினர் சீனிவாசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், ஒன்றிய செயலாளர் சின்ராஜ் உள்ளிட்ட திமுக முக்கிய நிர்வாகிகள் ராயக்கோட்டை காவல் நிலையத்திற்கு நேரடியாகச் சென்றனர்.

காவல்துறையினரிடம், "அன்பானந்தம் மீது என்ன வழக்கு உள்ளது? ஏன் நள்ளிரவில் அவர் இல்லத்திற்குச் சென்று தேடினீர்கள்?" என்று முறையிட்டனர்.

**தி.மு.க. எச்சரிக்கை: "பிரம்மாண்ட ஆர்ப்பாட்டம்"**

செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. நிர்வாகிகள், "அரசியல் ரீதியான விமர்சனங்களுக்கு சகிப்புத் தன்மையின்றி காவல்துறை மூலம் மிரட்டல் விடுப்பது கண்டிக்கத்தக்கது. அன்பானந்தம் மீது அரசியல் பழி வாங்கும் நோக்கில் பொய் வழக்கு ஏதேனும் போடப்பட்டால், கழகத் தலைவர் அவர்களின் ஆலோசனையின்படி, ராயக்கோட்டையில் ஒட்டுமொத்த பொது மக்களையும், தொண்டர்களையும் திரட்டி மிகப் பெரிய அளவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்" என எச்சரித்துள்ளனர்.

இந்த நள்ளிரவு போலீஸ் சோதனைச் சம்பவம் வேப்பனஹள்ளி மற்றும் ராயக்கோட்டை பகுதியில் பெரும் பதற்றத்தையும், அரசியல் வட்டாரத்தில் பரப்பரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.




கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ராயக்கோட்டை அருகே உள்ள போடம்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் தி.மு.க. விவசாய அணியின் மாநில துணைச் செயலாளர் அரியப்பன். இவரது இளைய மகன் அன்பானந்தம், தி.மு.க.வின் 'GEN Z' ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினராக உள்ளார். முதல்வரை விமர்சித்ததால் ஜென்சி நிர்வாகி நள்ளிரவில் வீட்டை முற்றுகையிட்ட காவல்துறை. தகவலறிந்த கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரான பிரகாஷ், மாநில இளைஞரணி துணை செயலாளர் வேப்பனஹள்ளி சட்டமன்ற உறுப்பினர் சீனிவாசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், ஒன்றிய செயலாளர் சின்ராஜ் உள்ளிட்ட கழகத்தினர் காவல் நிலையத்தில் முற்றுகையிட்டனர்.

---

### ஆலந்தூர் தெற்கு பகுதி, 164வது
## வட்டச் செயலாளர் டி.ஏசு (எ) ஏசுதாஸ் மறைவு!
### கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஜூன்.24-

காஞ்சி வடக்கு மாவட்டம், ஆலந்தூர் தெற்கு பகுதி, 164 வது வட்ட கழக செயலாளர் டி. ஏசு (எ) ஏசுதாஸ் நேற்று முன்தினம் 23.6.2026 செவ்வாய்க்கிழமை காலை 6 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

செய்தி அறிந்து கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று ( 24.6.2026 புதன் கிழமை ) மதியம் 1 மணி அளவில் 2/30 நேரு காலனி மெயின் ரோட்டில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இருந்து இறுதி ஊர்வலம் புறப்பட்டு பக்தவச்சலம் நகர் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.



---

## கறைபடிந்த சி.டி.!

பிரம்மாதம்
பேரறிஞர்
மூதறிஞர்
பெரியவர்
பெருந்தலைவர்
கலைஞர்
புரட்சித்தலைவர்
புரட்சித்தலைவி
நேற்றைய

அறிவாலய
பெருமனத்தார்
வரை


தகைசால்
முதல்வர்கள்
தடம்பதித்த
அவையில்

"அம்பிகாகாபி ஹோட்டல்" என
எழுதித் தரப்பட்டதை

"அம்பி "காகாபி" ஹோட்டல் என
வாசித்த கதையாக....

வந்தார்
படித்தார்
நடித்தார்
நையாண்டி
செய்தார்...

சம்பந்தமில்லாமல்
உளறினார்




சைகை
காட்டினார்

மொத்தத்தில்

குத்தாட்ட
முதல்வரது
கொள்கைப்
பாடலால் சொன்னால்

"கறைபடிந்த சிடி"

அம்புட்டுத்தான்.



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித்
தொடர்புக் குழு
துணைத் தலைவர்